# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.4 நிறைவான திருப்தி




**வேத வசனம்:** **ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

*மத்தேயு 5:3*

**அறிக்கை:** **தேவன் தம்மை நம்புகிறவர்களுக்கு மிகுதியான ஆசீர்வாதங்களை ஆயத்தம் செய்துள்ளார்**

**சத்தியம்:** தேவனுடைய சந்நிதியில் நிறைவான சந்தோஷம் உண்டு. ஆகையால் நாம் கர்த்தருக் குள் மகிழ்ச்சியாயிருப்போம். அப்போது அவர் நம் மனதின் வேண்டுதல்களை நிறைவேற்றுவார்.

**அறிமுகம்** *நம்முடைய முந்தைய பாடம் முழுமையான விசுவாசம் என்ற தலைப்பைப் பற்றியது. இன்றையத் தலைப்பு முழுமையான போதும் என்கிற மனது. இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கு அழியாத மகிழ்ச்சி இருப்பதாக வேதப்புத்தகம் சொல்லுகிறது.*

*தாவீது அரசன் தன்னுடைய சிறிய வயதிலிருந்து அவருடைய இருதயத்தில் ஒரு வெற்றிடம் இருப்பதாகத் தன்னுடைய சங்கீதத்தில் குறிப்பிடுகிறார். கர்த்தர் இல்லாத இருதயத்தில் எப்போதும் ஒரு தேடலும் வெற்றிடமும் இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் எப்போதும் பாடல்கள் வழியாகத் தேவனை ஆராதித்து வந்தார்.*

### வேதப் பகுதி: சங்கீதம் 23

**பாடம்** **1. இருதயத்தில் உள்ள வெறுமை:** அவருடைய இருதயங்களிலும் ஒரு வெற்றிடம் இருக்கிறது என்று வேதப்புத்தகம் நமக்கு அறிவிக்கிறது. இது ஹாங்காங் நடைபாதையில், "நடைபாதையில் உள்ள இடைவெளியை கவனித்துக்கொள்ளுங்கள்" என்று எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் ஒரு ஒலிப்பதிவு செய்யப்பட்ட அறிவிப்பு போன்றது. மெய்யாகவே ஆண்களோ பெண்களோ அனைவரது ஆவியிலும் கர்த்தர் மட்டுமே நிரப்பக்கூடிய ஒரு வெற்றிட உணர்வு இருந்துகொண்டே இருக்கும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த சாலோமோன் அரசன் குறிப்பிடுகிறான் "வசனம்" பிரசங்கி 2:17, 5:10

**2. வெறுமையின் உணர்வை அகற்ற வேண்டும்:** அனைவரும் ஏதோ ஒரு நேரம் தனிமையையும், ஏமாற்றத்தையும், வெறுமையையும் சந்தித்தே ஆகவேண்டும். மனிதன், தன்னுடைய மனதில் வெறுமை உணர்வு எப்போதும் இருப்பதால், அந்த வெற்றிடத்தை நிறையச்செய்யும் காரணியை எப்போதும் தேடிக்கொண்டே இருக்கிறான் என்று மனோதத்துவ நிபுநர்கள் கூறுகிறார்கள்.

**3. நிலைத்திராத திருப்தி:** இருப்பினும் அவன் எவைகளுக்குப் பின்னே செல்லுகிறானோ அவை அனைத்தும் அவனுக்கு ஏமாற்றைத்தையும், அனைத்தும் வீண் என்ற உணர்வையுமே தருகிறது. காரணம் அவனை திருப்திப்படுத்துகிற அனைத்தும் நிலையற்றவைகளே. உதாரணம்: ஆண் பிள்ளைகள் எவைகளை வேண்டும் என்று கேட்கிறார்களோ அவைகளைப் பெற்றுக்கொண்டபின்னரும் இன்னும் அதிகம் வேண்டும் என்கிறார்கள். பெண் பிள்ளைகள் அதிக உடைகள் இருந்தாலும் தங்களிடம் நல்லது இல்லை என்கிறார்கள். (பிரசங்கி 2:17)

**4. நிறைவான திருப்தி:** கர்த்தர் இயேசு சொல்லுகிறார், "வசனம்". நமக்கு உயிரைக்கொடுத்த தேவனால் மட்டுமே நமக்கு மனநிறைவையும் உண்டாக்க இயலும். சங்கீதக்காரன் தாவீது எழுதுகிறார், "வசனம்". அரசன் சவுலால் பல போராட்டங்களை எதிர்கொள்ளும் நேரத்திலும், எதிர்பாராத துன்பங்களைச் சகித்த நேரங்களிலும் தாவீது மனம் முழுவதும் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் வாழ்ந்தார். காரணம் அவர் தேவனை நம்பினார். அவர் தேவனுடைய முழுமையான மனநிறைவை எப்போதும் அனுபவித்தார். (யோவான் 6:35, சங். 37:4, 16:11)

**முடிவுரை:** நம்முடைய வெறுமையான இருதயத்தை முழுமையான திருப்தியால் நிரப்ப தேவன் சித்தம் வைத்திருக்கிறார். அரசன் தாவீதைப்போல நாம் தேவனை ஆராதித்து நம்மை அவர் அருகில் கொண்டு சென்று தொடர்ச்சியான மன நிறைவையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்போம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.